Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (26 - 12 - 1990) புதன்கிழமை ஓசை 301

## உலகில் ஐம்பது கோடி வலது குறைந்தவர்கள்

(நியூயோர்க்)

உலகில் ஐம்பது கோடி மக்கள் வலதுகுறைந்தவர்கள் என்று ஐ. நா ஸ்தாபன அறிக்கை ஒன்று கூறுகிறது. இவர்களில் 80 சத விகிதத்தினர் மூன்றாம் உலக நாடுகளில் வாழ்கிறார்கள். மூன்றாம் உலக நாடுகளில் யுத்தம், போதை வஸ்து பாவித்தல் ஆகியவற்றால் வலது குறைந்தோர் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. 1981 - 1991 காலப் பகுதியை ஐ. நா. ஸ்தாபனம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரியில் தேவாலயம் அருகே

# நத்தார் ஆராதனையின்போது விமானக் குண்டுவீச்சு!

## பலர் காயம்; வீடுகள் சேதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நத்தார் தினப் பிரார்த்தனைகள் நடந்துகொண்டிருந்த தேவாலயத்தின் அருகே சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் மேற்கொண்டதில் பலர் காயமடைந்துள்ளனர். மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை ஒன்பது முப்பது மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் வட்டமிட்ட இரு குண்டுவீச்சு விமானங்கள் சாவகச்சேரி தேவாலய வீதியிலும், இலங்கை வங்கிக் கட்டடத்தின் அருகிலும், தபாற்கந்தோர் வீதியிலும், வள்ளிவீனப் சந்தியிலும் குண்டுகளை வீசியுள்ளன.

இக்குண்டு வீச்சினால் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த திரு. ஆர். இராஜகுலசிங்கம் (52) படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், ஜி. குணரத்தினம், ச. நித்தியலட்சுமி ஆகியோரும் காயமடைந்தனர். மேலும் பலர் இத்தாக்குதலில் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தாக்குதலால் திருமதி சின்னத்துரை, திரு. கந்தையா ஜீவரட்ணம், ஜி. குணரத்தினம் ஆகியோரது வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இக்குண்டு வீச்சைத் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளான பகுதியில் இருந்த தேவாலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த நத்தார்ப் பிரார்த்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் பாடசாலை மீது விமானக் குண்டுவீச்சு

(பளை)

சிறிலங்கா விமானப்படையைச்சேர்ந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் பளைப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் பாடசாலை, தபாற்கந்தோர் கட்டடங்கள், தளபாடங்கள் என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன:

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு பளைப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் பளை மகாவித்தியாலயக் கட்டடமும் அங்கிருந்த தளபாடங்களும் முற்றாகச் சேதமடைந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைக்குச் செல்ல கட்டாயச் சட்டம்

(கொழும்பு)

ஐந்து வயதிற்கும் பதினாறு வயதிற்கும் உட்பட்டவர்கள் ... அமைச்சு அறிவித்துள்ளது. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை கட்டாயமாக ...

## பெத்தலேமில் பக்தர்கள் குறைவு

(பெத்தலேம்)

இயேசு பிறந்த நகரான பெத்தலேமில் இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகையன்று வழமைபோல் அதிகமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய பரீட்சைக்கு நேற்றுவரை வினாத்தாளில்லை

(நல்லூர்)

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இன்று காலை இறுதி ஆண்டுப் பரீட்சை நடைபெறவுள்ளது. ஆனால் பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகள் நேற்றுமாலை செய்தி அச்சுக்குப்போகும் வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. பொதிகளை கொழும்பிலிருந்து விமானம் மூலம் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் கைகூடவில்லை என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. வினாத்தாள் பொதிகள் வவுனியா வரை வந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடிக்கத் தடை

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு மீண்டும் தடை விதித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்திற்கு வடக்கேயுள்ள மூள்ளிக்குளம் முதல் தலைமன்னாரின் தெற்குப் பகுதிவரை எவரும் கடலில் மீன் பிடிக்கக் கூடாது என அறிவித்துள்ளது.

தடைவிதிக்கப்பட்டமைக்கு என்ன காரணம் என இதுவரை கூறப்படவில்லை.

## இளப்பன்பேர்க் அகதிமுகாமில் மேலும் 15 தமிழர் கைது

(திருமலை)

## பலர் காயம்; வீடுகள் சேதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நத்தார் தினப் பிரார்த்தனைகள் நடந்துகொண்டிருந்த தேவாலயத்தின் அருகே சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டதில் பலர் காயமடைந்துள்ளனர் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை ஒன்பது முப்பது மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் வட்டமிட்ட இரு குண்டுவீச்சு விமானங்கள் சாவகச்சேரி தேவாலய வீதியிலும், இலங்கை வங்கிக் கட்டடத்தின் அருகிலும், தபாற்கந்தோர் வீதியிலும், வள்ளிவனைச் சந்தியிலும் குண்டுகளை வீசியுள்ளன.

இக்குண்டு வீச்சினால் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த திரு. ஆர். இராஜகுலசிங்கம் (52) படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், ஜி குணரத்தினம், சு நித்தியலட்சுமி ஆகியோரும் காயமடைந்தனர். மேலும் பலர் இத்தாக்குதலில் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தாக்குதலால் திருமதி சின்னத்துரை, திரு. கந்தையா ஜீவரட்ணம், ஜி குணரத்தினம் ஆகியோரது வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இக்குண்டு வீச்சைத் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளான பகுதியில் இருந்த தேவாலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த நத்தாரப் பிரார்த்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் பாடசாலை மீது விமானக் குண்டுவீச்சு

(பளை)

சிறிலங்கா விமானப்படையைச்சேர்ந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் பளைப் பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதில் பாடசாலை, தபாற்கந்தோர் கட்டடங்கள், தளபாடங்கள் என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன:

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு பளைப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் பளை மகாவித்தியாலயக் கட்டடமும் அங்கிருந்த தளபாடங்களும் முற்றாகச் சேதமடைந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய பரீட்சைக்கு நேற்றுவரை வினாத்தாளில்லை

(நல்லூர்)

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இன்று காலை இறுதி ஆண்டுப் பரீட்சை நடைபெறவுள்ளது ஆனால் பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகள் நேற்றுமாலை செய்தி அச்சுக்குப்போகும் வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. பொதிகளை கொழும்பில் இருந்து விமானம் மூலம் கொண்டுவர மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளும் கைகூடவில்லை என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. வினாத்தாள் பொதிகள் வவுனியா வரை வந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடிக்கத் தடை

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு மீண்டும் தடை விதித்துள்ளது.

புத்தளம் மாவட்டத்திற்கு வடக்கேயுள்ள மூள்ளிக்குளம் முதல் தலைமன்னாரின் தெற்குப் பகுதிவரை எவரும் கடலில் மீன் பிடிக்கக் கூடாது என அறிவித்துள்ளது.

தடைவிதிக்கப்பட்டமைக்கு என்ன காரணம் என இதுவரை கூறப்படவில்லை.

## பாடசாலைக்குச் செல்ல கட்டாயச் சட்டம்

(கொழும்பு)

ஐந்து வயதிற்கும் பதினாறு வயதிற்கும் உட்பட்டவர்கள் கட்டாயமாக பாடசாலைக்கு செல்லவேண்டும் என நிர்ப்பந்திக்கும் சட்டமூலம் ஒன்றை அடுத்த வருட முற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது:

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை கட்டாயமாக பாடசாலைக்கு அனுப்பவேண்டியது அவசியம் என்றும் எல்லாப் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வழக்குகள் தாக்கல் செய்ய நடைமுறைகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ இணக்கமன்றுகளில் 1-1-91 ஆம் திகதியில் இருந்து முறைப்பாடு தாக்கல் செய்யும் போது பின் வரும் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவேண்டும் என தமிழீழ இணக்கமன்று. தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இணக்கமன்றுகளில் வழக்குத்தாக்கல் செய்ய கட்டணமாக 50 ரூபா அறவிடப்படும். ஆனால் வழக்குத் தாக்கல் செய்பவர் வறுமைக் கோட்டுக்குட்பட்ட வராயின் கட்டணம் 10 ரூபா செலுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளப்பன்பேர்க் அகதிமுகாமில் மேலும் 15 தமிழர் கைது

(திருமலை)

இளப்பன் பேர்க் அகதிமுகாமில் தங்கியிருந்த பதினைந்து தமிழ் ஆண்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திருமலை மாவட்டத்திலுள்ள இளப்பன் பேர்க் அகதிமுகாமில் தங்கி இருந்த பதினைந்து ஆண்களை அகதி முகாமுக்கு அருகில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் கைதுசெய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இக் கிளாப்பன் பேர்க் அகதி முகாமில் இருந்த தமிழர்களைப் பலதடவை இராணுவத்தினர் கைது செய்தமையும், அதில் பலர் படுகொலைசெய்யப்பட்டதும் தெரிந்ததே அதோடு இம்முகாமில் உள்ள தமிழ் அகதிகள் ஆலங்கேணியில் இருந்து பலவந்தமாகக் கொண்டு வந்து வைக்கப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (மு)

## குவைத்திலிருந்து வந்தவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

குவைத்திலிருந்து அண்மையில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா நகரப்பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

ஜெயராஜா மனோகரன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தக வங்கியில் வெளிநாட்டு வங்கி வரவுகளை உள்நாட்டு வரவுகளாக்கஒழுங்கு

வாரம் ஒருமுறை தமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வெளிநாட்டு பணஅலகுகளின் பெறுமதி நிலையை அறிந்து யாழ் மாவட்டத்தில் வெளி நாட்டு வங்கிவரவுகளை வைத்திருப்பவருக்கு உள்நாட்டு வங்கி வரவுகளாக மாற்றி வழங்கும் செயற்பாட்டை தற்போது யாழ்ப்பாண வரையறுக்கப் பட்ட வர்த்தகவங்கி செய்து வருகிறது.

இந்த செயற்பாடு குறித்து இவ்வங்கியின் பிரதான முகாமையாளர் கூறுகையில் எமது வங்கியில் இப்பொழுது பணச் சுற்றோட்டம் இல்லாததாலேயே காசோலைகளாகக்கொடுப்பனவுகள் செய்யவேண்டி உள்ளது என்றார். (வோ)

## வவுனியாவில் கைதாகிய பெண் விசாரணைக்காக கொழும்பிற்கு

(வவுனியா)

வவுனியா நகரில் வைத்து இராணுவ உளவாளிகளினால் கைது செய்யப்பட்ட இளம் பெண் விசாரணைக்கென கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

வவுனியா 'ஜோசெப்' இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட இப் பெண், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து கொழும்பிற்கு அனுப்பப் பட்டுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான முறையில் நத்தார் கொண்டாட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நத்தார் தினக்கொண்டாட்டங்கள்நேற்று அமைதியானமுறையில் பரவலாகக் கொண்டாடப்பட்டன.

அனைத்துத்தேவாலயங்களிலும்விசேடநத்தார்ஆராதனைகள் இடம்பெற்றன. இத்தக் கொண்டாட்டங்களில் கிறிஸ்தவ சமய மக்கள் மட்டுமல்லாது சைவசமய மக்களும் பங்கெடுத்தது சிறப்பான ஒரு விடயமாகும். யாழ். நகரிலும் அதனை அண்டிய கரையூர், பாஷையூர், குருநகர் பகுதிகளில் உள்ள பல தேவாலயங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லொறிச்சாரதிகள் 15 பேர் இராணுவத்தால் விடுதலை

(வவுனியா)

நவம்பர்மாதம் 21 ஆம் திகதி வவுனியா கண்டி வீதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த லொறிச்சாரதிகளும், கிளினர்களும் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

வவுனியா "யோசெப்" இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக் குட்படுத்தப்பட்ட இவர்கள் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

பொன்னுத்துரை விநாசித்தம்பி (ஓமந்தை, இறம்பைக் குளம்), ஆ தங்கவேல் (சுவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

மூன்று அறை வீடுடன் வாழ்த்து அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்ஸ்'' இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். ''அரங்குவெளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R-888)

**நியூ வெஸ்ரோன் எலெக்ரோனிக் கோப்**

ரீ.வி., டெக், ரேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லாவிதமான மின்சார உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும், வீடியோஸ்டில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். இலக்கம் 741, மானிப்பாய் வீதி, ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம். (B 1713)

**சைவ உணவு**

நியூ ஞானந்த பவான் (சைவ உணவு) சிறந்த முறையில் உடன் ஓடர்கள் செய்து கொடுக்கப்படும் இல 879, கே கே எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (B1710)

**விற்பனைக்கு**

கல்வியின் உளவியல் அடிப்படைகள் By S சந்தானம் (Phychological Foundations of Education) விலை ரூபா 148/25 விற்பனையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை (நகுலினி) யாழ்ப்பாணம். (B/ 1719)

**யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்**

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்) எனும் முகவரியில் இயங்கி வந்த எமது றெஸ்ற்ரோறன்ற் தற்போது இல. 59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (200 யார் தூரத்தில்) (B- 1742)


## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிறன்று அளவெட்டியில் இடம்பெற்ற தமிழீழ மண்மீட்பு நிதியின் நிகழ்ச்சியின்போது கைவிடப்பட்ட நிலையில் திறப்புக் கோர்வை ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்

# யாழ். பல்கலை. ஊழியருக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் சேவைபுரியும் அரச உத்தியோகஸ்தருக்கு வழங்கப்பட்ட 1989 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுப்பணத்தை யாழ். பல்கலைக்கழகத்தின் சேவையாற்றும் ஊழியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் வழங்குவதற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பலமுறை விண்ணப்பித்தன் பலனாக பலமாதங்களின் பின்பு இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

5 ஆம் திகதி ஜூன் மாதம் 1989 ஆம் ஆண்டிலிருந்து 31 ஆம் திகதி டிசம்பர் மாதம் 1989 ஆம் ஆண்டு வரைக்கும் யுத்தப்பிரதேச ஊக்குவிப்புப்படி வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு தீர்மானம் எடுத்து சுற்றறிக்கை அனுப்பி வைத்திருந்தது. ஆனால் இந்த சுற்றறிக்கையின் படி யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கோ அதன் உத்தியோகத்தர்களுக்கோ விரிவுரையாளர்களுக்கோ இந்த மேலதிகப்படி வழங்க அனுமதிக்கவில்லை.

இறுதியாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் இந்த நடைமுறை குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பலமுறை கடிதம் எழுதி வேண்டிக் கொண்டதன் பலனாக இறுதியில் இந்த சுற்றறிக்கையின்படி யுத்த பிரதேச ஊக்குவிப்புப்படி வழங்க உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக பதிவாளர் திரு. எஸ். பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


## தமிழீழ போக்குவரத்து காவல் துறையினரின் விளம்பரம்

போக்குவரத்துக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்.

முழுப்பெயர்:-
விலாசம்:-

1. உயரம் - 5 அடி 6 அங்.
2. மார்பளவு -32 அங் (மூச்சு வெளிவேறிய நிலையில்)
3. வயதெல்லை 01-01-1991 இல் 18 தொடக்கம் 30 வரை

**கல்வித்தகைமை**

க. பொ. த. சாதாரணம் தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்**

1. சாரணியம்
2. முதலுதவிப் படை
3. விளையாட்டு

இதில் ஏதாவது ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

1. உதவிப்பணம் வழங்கப்படும்.
2. யாழ். மாவட்டத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30. 12. 1990க்கு முதல் அல்லது அன்று சொந்தக் கையெழுத்தில் தயாரித்து பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கவும்.

போக்குவரத்து காவல்துறை,
கோண்டாவில். (B/1769)


## மரண அறிவித்தல்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விலங்கு வேளாண்மைத் துறைக்கு பண்ணை அமைப்பதற்குகந்த கால்நடைகளை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால் நடைகளை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் பண்ணையாளர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் கீழுள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான விபரங்களுடன் 08. 01. 1991 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு முன்னர் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கால்நடைகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்'' என்று குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

**1. ஜேர்சி கலப்பின கறவைப் பசுக்களை வழங்குதல்:**

ஜேர்சி கலப்பின பசு / நாகுகள் 2 1/2 — 04 வயதுக்குட்பட்டதாகவும், 08 - 10 லீற்றர் பாலுற்பத்தியுடையனவாகவும் முதலாவது அல்லது இரண்டாவது கன்று ஈன்றதாகவும், 02 - 04 மாத கன்றுடன் அல்லது பிந்திய சினைப்பருவத்தில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி பசுக்களை வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் பசுக்களின் எண்ணிக்கை, கோரும் விலை விபரம், ஒவ்வொரு விலங்கினதும் இனம், வயது, கறவை / சினைப்பருவம், பாலுற்பத்தி (லீற்றர்) கன்று ஈன்ற பசுவாயின் வயது ஆண் / பெண் இன விபரம் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**2. ஜேர்சி, தர்பகார், சிந்தி இன காளை மாடுகள் வழங்குதல்.**

ஜேர்சி, தர்பகார், சிந்தி இன - இன விருத்திக்காக சேவைக்குட்படுத்தக் கூடிய 02-03 வயதுடைய செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறந்த காளை மாடுகள் தேவைப்படுகின்றன. இவற்றை வழங்க விரும்புபவர்கள் ஒவ்வொரு விலங்கினதும் இனம் வயது, தாய்ப்பசுவின் பாலுற்பத்தி, விலை விபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

**3. தூய ஜமுனாபாரி, சாணான் மறி ஆடுகளை வழங்குதல்**

யாழ். குடாநாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனா பாரி, தூய இன சாணான் 08 மாதம் - 18 மாத வயதுக்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க இருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், வயது, கோரும் விலைவிபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

**4. தூய இன ஜமுனாபாரி, சாணான் கடாய் ஆடுகளை வழங்குதல்.**

யாழ் குடாநாட்டுப் பகுதியிலிருந்து 1 1/2 - 2 1/2 வயதுக்கிடைப்பட்ட தூயஇன ஜமுனா பாரி, சாணான் இன விருத்திக்குகந்த கடாய் ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது, எண்ணிக்கை, விலை விபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**5. நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்.**

இன விருத்திக்காக நாட்டு இனங்களை 01 - 1 1/2

திருச் சந்தி, யாழ்ப்பாணம்.
(B1710)

### விற்பனைக்கு

கல்வியின் உளவியல் அடிப்படைகள் By S சந்தானம் (Phychological Foundations of Education) விலை ரூபா 148/25 விற்பனையாளர் பூபாலசிங்கம் புத்தகசாலை (நகுலினி) யாழ்ப்பாணம். (B/ 1719)

### யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்) எனும் முகவரியில் இயங்கிவந்த எமது றெஸ்ற்றோறன்ற் தற்போது இல.59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (200 யார் தூரத்தில்)

(B- 1742)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிறன்று அனலைதீவில் இடம்பெற்ற தமிழீழ மண்மீட்பு நிதியின் நிகழ்ச்சியின்போது கைவிடப்பட்ட நிலையில் திறப்புக் கோர்வை ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

மேலும் அரியாலையில் திருமகள் வீதியில் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனையும் உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கப்டன்காந்தியின் நினைவஞ்சலிக் கூட்டம்

(கொழும்புத்துறை)

இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த முன்னாள் கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் கப்டன் காந்தியின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் கடந்த ஞாயிறன்று மாலை ஆறு மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத் திறந்த வெளியரங்கில் நிலையத் தலைவர் திரு. பி. தேவக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மகளிர் முன்னணியின் பல முக்கிய பிரமுகர்களும் உரையாற்றினர். (4)

அடிப்படைத் தகைமைகள்.

முழுப்பெயர்:-
விலாசம்:-

1. உயரம் - 5 அடி 6 அங்.
2. மார்பளவு -32 அங் (மூச்சுவெளிவிடிய நிலையில்)
3. வயதெல்லை 01-01-1991இல்18தொடக்கம்30வரை

**கல்வித்தகைமை**

க. பொ. த. சாதாரணம் தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்**

1. சாரணியம்
2. முதலுதவிப் படை
3. விளையாட்டு

இதில் ஏதாவது ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

1. உதவிப்பணம் வழங்கப்படும்.
2. யாழ்.மாவட்டத்தின்எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30. 12. 1990க்கு முதல் அல்லது அன்று சொந்தக் கையெழுத்தில் தயாரித்து பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கவும்.

போக்குவரத்து காவல்துறை,
கோண்டாவில்.
(B/1769)

## மரண அறிவித்தல்

### திரு. கதிரவேலு நல்லையா
(மாங்கன்று நல்லையா)

இளைப்பாறிய திரு. கதிரவேலு நல்லையா காலமானார். அன்னார் காலஞ்சென்ற நீர்வேலி கதிரவேலு, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், லதயல்நாயகியின் அன்புக் கணவரும், இராசையா (மலேசியா), காலஞ்சென்ற பொன்மலர் (மலேசியா), மனோன்மணி (மலேசியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சச்சிதானந்தன் (விவசாய திணைக்களம்-முழங்காவில்), நேசமலர், குணமலர் (லண்டன்), உருத்திராதேவி (ஆராய்ச்சி நிலையம் - திருநெல்வேலி), மஞ்சுள மலர் (மிருக வைத்திய நிலையம் - சங்கானை), புஸ்பமலர், சற்குணானந்தன் (ஜேர்மனி), கலைச்செல்வி (தொழில்நுட்பக் கல்லூரி), தவச்செல்வி (தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, பக்தகுணநாதன் (துறைமுக அதிகார சபை - கொழும்பு), மனோகரன் (லண்டன்), தவராஜமித்திரன் (ஓமான்), கணேசலிங்கம் (சி.ஐ.சி. நிறுவனம்-கொழும்பு) சந்திரஜோதி (பிறவுண் சன்ஸ் நிறுவனம் - கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமி இரத்தினசபாபதி, செல்வராசா, குணநாயகம், இராஜேஸ்வரி, சந்திராதேவி (ஆசிரியை - கோப்பாய்), சிவலோகநாதன் (விவசாய உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-12-90 புதன்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் கணக்கமரத்தடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
இ. கணேசலிங்கம்
(R970)

பிறிய இனைப்பருவத்தில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி பசுக்களை வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் பசுக்களின் எண்ணிக்கை, கோரும் விலை விபரம், ஒவ்வொரு விலங்கினதும் இனம், வயது, கறவை / சினைப்பருவம், பாலுற்பத்தி (லீற்றர்) கன்று ஈன்ற பசுவாயின் வயது ஆண் / பெண் இன விபரம் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

2. ஜேர்சி, தார்பகார், சிந்தி இன காளை மாடுகள் வழங்குதல்.

ஜேர்சி, தார்பகார், சிந்தி இன - இன விருத்திக்காக சேவைகளுட்படுத்தக் கூடிய 02-03 வயதுடைய செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறந்த காளை மாடுகள் தேவைப்படுகின்றன. இவற்றை வழங்க விரும்புபவர்கள் ஒவ்வொரு விலங்கினதும் இனம் வயது, தாய்ப்பசுவின் பாலுற்பத்தி, விலை விபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. தூய ஜமுனாபாறி, சாணான் மறி ஆடுகளை வழங்குதல்

யாழ். குடாநாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனா பாறி, தூய இன சாணான் 08 மாதம் - 18 மாத வயதுக்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க இருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், வயது, கோரும் விலைவிபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

4. தூய இன ஜமுனாபாறி, சாணான் கடாய் ஆடுகளை வழங்குதல்.

யாழ் குடாநாட்டுப் பகுதியிலிருந்து 1 1/2 - 2 1/2 வயதுக் கிடைப்பட்ட தூயஇன ஜமுனா பாறி, சாணான் இன விருத்திக்குரிய கடாய் ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது, எண்ணிக்கை, விலை விபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

5. நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்.

இன விருத்திக்காக நாட்டு இனவகை 01 - 1 1/2 வயதுடைய மறி ஆடுகள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றன. தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து 01 - 1 1/2 வயதுடைய நாட்டு இன மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், வயது, கோரும் விலை விபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

### மாதிரிக் கேள்விப் பத்திரம்

1. முழுப் பெயர்: ..........................................
2. முகவரி: ..........................................
3. கால் நடைகள் இருக்கும் இடம்:
   1) கிராமம்:
   2) உதவி அரச அதிபர் பிரிவு
   3) மாவட்டம்:
4. வழங்க விரும்பும் கால் நடைகளின் விபரமும் கோரும் விலையும்:

| (1) கால் நடை வகை | (2) இனம் | (3) வயது | (4) எண்ணிக்கை | (5) பாலின் அளவு (லீற்றரில்) | (6) கோரும் விலை |
|---|---|---|---|---|---|

5. மேற்குறிப்பிட்ட கால் நடைகளை கையளிக்கக் கூடிய இடம் (முகவரி)

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்
(B/1764)

நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போர் இடம்பெறுமானால் ஈராக்குடன் சர்வதேச நாடுகள் இலவற்றின் 'பல தேசிய இராணுவம்' மோதிக் கொள்ளும். இதன் காரணமாக இந்த யுத்தம் ஒரு சர்வதேச யுத்தத்திற்கான தன்மையைப் பெறுகின்றது.

அதேபோன்று இந்தப் போர் ஒரு நாட்டின் மண்ணில் நடைபெறப் போவதில்லை. வளைகுடா நாடுகளில் அநேகமானவற்றில் -ஈரான் தவிர- நடைபெறப் போகின்றது. அதேவேளை மத்திய கிழக்கு நாடுகளும் இந்தப் போரில் நேரடியாகப் பங்கு கொள்ளும் நிலை தவிர்க்கமுடியாமல் போகும். ஈராக் தன் மீது போர் தொடுக்கப்பட்டால் இஸ்ரேல்மீது தாக்குதல் தொடுக்கப்படும் என பலமுறை. தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றது. அத்தோடு எகிப்து, சிரியா என்பன 'பல தேசிய இராணுவத்தில்' பங்கு கொள்வதால் அந்த நாடுகளின் இலக்குகளும் தாக்கப்படலாம்.

அதேவேளை இந்தப் போரில் இரசாயன ஆயுதங்களும், அணு ஆயுதங்களும் பாவிக்கப்படும் என்ற எச்சரிக்கைகள் போருக்கு முன்னரே வெளிவந்து விட்டன. ஈராக் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படும் என ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்து வருகின்றது. அமெரிக்கா தம்மிடமும் அதற்கு மேலாக அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் வளைகுடாவில் இருப்பதாகத் தெரிவித்துள்ளதோடு வளைகுடாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படைகளிடம் அணுவாயுதம் இருப்பதாகவும் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வளைகுடாவில் போர் ஆரம்பிக்கப் பட்டால் அது பல நாடுகள் பங்கு பற்றும் ஒரு சர்வதேச போராக மாறுவதோடு பெரும் நாசங்களை விளைவிக்கும் இரசாயன, அணுவாயுதப் போராகவும் மாறும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் போரின் மூலம் உலகில் உள்ள சக்தி சமனற்ற நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வளைகுடாவில் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்கப்பார்ப்பதோடு அரபுலகில் பலமான ஒரு தலைமை ஏற்படுவதையும் தடுக்கப் பார்க்கின்றது.

ஆனால், இந்தப் போர் மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரங்களை மிகவும் இக்கட்டானதொரு நிலைக்குத் தள்ளிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இன்றே மூன்றாம் உலக நாடுகள் குறிப்பாக தெற்கு, தென் கிழக்காசிய நாடுகள் போர் சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டன. இன்னும் பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற நாடுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து நாடு திரும்பியுள்ளனர். இதனால் பெருமளவு அன்னியச் செலவாணி இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நாடுகளுக்கான ஏற்றுமதி தடைப்பட்டதால் வருமானத்தில் கணிசமான வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை உலக சந்தையில் 18 - 20 அமெரிக்க டொலர்கள் விற்ற ஒரு பீப்பா எண்ணெய் தற்பொழுது 35 டொலருக்கு மேலாகச் செல்கின்றது.

இந்த நிலையில், போர் ஆரம்பிக்குமாக இருந்தால் மேலும் இந்த நாடுகளின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகும். இதனை இந்தநாடுகளும் தெளிவாக உணர்ந்துள்ளன. இது தொடர்பாக ஐ.நா.விடம் பல முறை அவை தமது நெருக்கடியைப்பற்றி வலியுறுத்தியும் உள்ளன. ஆனால் ஐ நாடுகள்சபையானது அமெரிக்காவின் ஒரு சபையாக செயற்படுகின்றதே ஒழிய உலக நாடுகளின் சபையாக அது செயற்படவில்லை. ஏனெனில் ஐ நாடுகள் சபையும் பலமானவர்களாலும், போரில் வெற்றிகொண்டவர்களாலும் அமைக்கப்பட்ட ஒரு சபை என்பதை நிரூபித்து வருகின்றது.

---

த்தை தணிக்கவும், சோவியத்தின் சார்பில் பெரும் பங்காற்றியவர் எட்வேட் ஷெவர் நாட்சே. ஆதலால் அவரது கருத்துக்கள் முக்கியத்துவம் உடையவை ஆகின்றன.

சீர்திருத்த வாதம் என்ற போர்வைக்குள் சர்வாதிகாரம் புகுந்துகொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக எச்சரித்த ஷெவர் நாட்சே அதனை எதிர்க்கும் வகையில் தமது பதவியைத் துறக்கவும் முன்வந்திருப்பதாக அறிவித்தார். எவரையும் பெயர் சுட்டிக்காட்டி எவரையும் நேரடியாகக் கண்டிக்காமல் மிகுந்த உணர்ச்சி பூர்வமான உரையினை நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய ஷெவர் நாட்சே, இப்போதும் கோர்பசேவின் சீர்திருத்தக் கருத்துக்களை அங்கீகரிப்பதாகத் தெரிவித்தார்.

ஷெவர் நாட்சேவின் உரையைக் குறித்து அதிபர் கோர்பசேவ் இத்தகைய உரையொன்றை நிகழ்த்துமுன்பு தன்னுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும், நிர்வாக மறுசீரமைப்பில் ஷெவர் நாட்சேவிற்கு முக்கிய பதவிப் பொறுப்புகள் கொடுக்க எண்ணியிருந்ததாகவும் தெரிவித்தார். ஆனால் சோவியத்தின் இராணுவத்தலைமையோ, இக்கட்டான, நெருக்கடிமிக்க நேரத்தில் ஷெவர்நாட்சே கை கழுவி விடும் போக்கைக் கடைப்பிடித்திருப்பதாக கண்டனம் கூறியுள்ளார். லெனின் கிராட் நகர மேயரும், தற்போது யப்பானில் விஜயம் மேற்கொண்டிருக்கும் லிதுவேனிய தலைவரும் ஷெவர் நாட்சேவின் கருத்துக்களுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வளைகுடா நெருக்கடி தொடர்பாக ஷெவர்நாட்சே தெரிவித்து வந்த கருத்துக்களே அவரை நெருக்கடிக்கு உள்ளாக்கியதாக ஒரு கருத்து வெளிவந்தது. ஆனால் ஷெவர் நாட்சேவின் பதவி துறப்பு பற்றிய கூற்றுக்கள் வளைகுடா தொடர்பான சோவியத்தின் கொள்கைகளை மாற்றிவிடாது என்று கோர்பசேவ் மீளவும் உறுதி கூறியுள்ளார்.

எது எவ்வாறாயினும் ஈராக் மீது படைபலத்தைப் பிரயோகிக்கும் விடயத்தில் தனது இராணுவத்தையும் ஈடுபடுத்த சோவியத் யூனியன் முன்வராது என்றே நம்பப்படுகின்றது. பொருளாதார அழுத்தங்களாலும் மற்றும் நெருக்கடிகளாலும் ஈராக்கை குவைத்தை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதுவே சோவியத்தின் நிலைப்பாடாக உள்ளது.

இதனிடையில் லிதுவேனியா மூட்டிய கனல் மற்றும் பல சமஷ்டி அரசுகளில் பரவத்

கோர்பசேவ் உலக நாடுகளிடம் கையேந்தி நிற்கின்றார். சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக கிழக்கைரோப்பாவில் வார்சோ ஒப்பந்தநாடுகளினைப்பேணி ஒரு மாபெரும் 'வல்லரசாக' உருப்பெற்றிருந்த சோவியத் யூனியன் இன்று நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் நிலை மிகுந்த வியப்பையும்- அதிர்ச்சியையும்

அடிப்படையிலமைந்த சமஷ்டிக் குடியரசுகள் கூடுதல் சுயாட்சியைக் கோருவதுடன் தன்னிச்சையான செயற்பாட்டிற்கும் அனுமதி கோரி நிற்கின்றன. எனவே தாம் போராடிக் கொண்டிருக்கும் தேசிய இனமாகிய நாம் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

---

## நவம்பரில் கடலில் கைதான எட்டுப் பேர் விடுதலை

(குருநகர்)

கடந்த நவம்பர் மாதம் சிறிலங்கா கடற் படையினரால் நெடுந்தீவுக் கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட எட்டுப் பேர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தமிழகம் செல்லும் வழியில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட இரு இந்தியத் தமிழர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னதாக விடுதலை செய்யப்பட்டனரென்று விடுதலையான இவர்கள் கூறினர்.

விடுதலையானவர்களின் பெயர் விபரம் வருமாறு:

ட.தேவதாஸ் குருநகர், பி.யோண்அன்ரன் குருநகர், ச.கலிபர் குருநகர், வில்லியம் குருநகர், ராஜன் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம், கதிரமலை தெல்லிப்பளை ஆகியோர் கடந்த 21 ஆம் திகதி நயினாதீவு கடற்படை முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் கடந்த திங்களன்று யாழ் வந்து சேர்ந்தனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் மன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்தனரெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## 88 பெண் போராளிகள் இதுவரை வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

— மாலினி

"தமிழீழ மண் மீட்புக்காக நடைபெறுகின்ற போராட்டத்தில் இதுவரை 88 பெண் போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிற இக் காலகட்டத்தில் அனைத்துப் பெண்களும் தயங்காது போராடுவதற்கு முன்வர வேண்டும்."

வீரமரணமடைந்த மேஜர் முரளி, கப்டன் காந்தி உட்பட பன்னிரு வேங்கைகளின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி மாலினி கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தவெள்ளியன்று கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிமண்டபத்தில் கோப்பாய்வடக்கு சிற்றூரவைத் தலைவர் திரு சூரியகுமாரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி நிசாந்தி, மற்றும் சிற்றூரவைத் தலைவர்கள் உட்பட பலர் உரையாற்றினர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. எஸ். பாலன் இந்த அஞ்சலிக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

## புகையிரத சேவை மதவாச்சி வரையுமே

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை முதல் வவுனியாவிற்கான புகையிரத சேவை மதவாச்சி வரை மட்டுமே ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தலின் பேரில் இது நடைமுறைப் படுத்தப்பட்டதாகவும் மறு அறிவித்தல் வரை இந்த நடைமுறையே இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

